# Tamil Nadu Electricity Board Engineers' Association

(Recognized in G.O. No.854 dated 06-04-1946)
Regn. No.217/94


President :
Er. K. INDIRANI, B.E., M.C.A., F.I.E.,
(M) +91 87785 38236

Vice President I :
Er. BYRON STEPHEN, B.E., M.B.A., LLM.,

Vice President II :
Er. G. JAYARAJAN, M.Tech., M.B.A., F.I.E.,

General Secretary :
Er. T. JAYANTHI, M.Tech., M.B.A.(HR),
(M) +91 97106 22185 / 94422 21794

Organising Secretary
Er. G. RAMADOSS, B.E.,

Secretary (Publication)
Er. V.P. MUTHUKUMAR, M.E.,

Secretary (Administration)
Er. N. ARUNACHALAM, B.E., PGDCA, CEA

Secretary (Minnagam)
Er. D. ANAND KUMAR, M.Tech.,

Secretary (Legal) :
Er. V. SAMPATH KUMAR,
M.Tech. (Hons.), M.I.E.,

Secretary (Personnel Affairs) :
Er. A. MURUGAN, B.E.,

Secretary (Internal Affairs) :
Er. R. GAYATHRI, B.E.,

Treasurer :
Er. N. SENTHIL KUMAR,
M.Tech., PGDPM, M.I.E.
(M) +91 94980 38894

Secretary / EBF :
Er. S. PALANIRAJU,
B.E., PGDOR, M.B.A., M.I.E.,

Treasurer / EBF :
Er. C. RAJA SEKHAR, M.Tech., M.B.A.,
(M) +91 94435 58840


பெறுதல்

மதிப்பிற்குரிய மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் அவர்கள்,
சென்னை.

க.எண் : பொ.கழகம்/ பொ.செ/அ. 14 /2021, நாள். 12.01.2021

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: பொறியாளர் கழகம் - முக்கிய கோரிக்கையான உதவி பொறியாளர் நேரடி நியமனம் குறித்து - தங்களின் உடனடி கவனத்திற்கும் - தங்களின் மேலான நடவடிக்கைக்காகவும் வேண்டி சமர்ப்பித்தல் - சம்பந்தமாக.

வணக்கம்,

மதிப்பிற்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் கழகம் தனது பணிவன்புடன் கூடிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும், தமிழர் திருவிழாவாம் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளையும், மகிழ்வுடன் தெரிவித்து கொள்கிறது. இப்புத்தாண்டில் அனைத்து வளங்களும் நம் தமிழக மக்களை சென்றடைய அயராது உழைத்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் இத்தருணத்தில் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை பொறியாளர் கழகம் சமர்ப்பிக்கின்றது.

பொறியாளர் கழகம் இத்தருணத்தில், எங்களின் முக்கிய கோரிக்கையான உதவி பொறியாளர் நேரடி நியமனம் குறித்து தங்களின் மேலான கவனத்திற்கு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்க விழைகிறோம்

கடந்த 2019 ஆண்டு சட்டப்பேரவை கூட்டத்தில் அறிவித்ததன் பேரில், கடந்த 08.01.2020 அன்று மின் வாரியமானது, உதவிப் பொறியாளர்/ மின்னியல் - 400, இயந்திரவியல் -125, சிவில் - 75 ஆகிய பதவிகளுக்கு நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்திட, பொது அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு 24.02.2020 க்குள் இணைய வழியில் தகுதியுடையோர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொண்டது. பின்னர், கொரோனா பேரிடர் காரணமாக, விண்ணப்பிக்கும் காலம் மீண்டும் 16.03.2020 வரை நீட்டிக்கப்பட்டது.


"Electricity Avenue", 144, Anna Salai, Chennai - 600 002. ✆ : 044 2852 0731
E-mail : tnebea@gmail.com Web : www.tnebengineers.in


*"Energy conservation is the foundation of energy independence"*

Scanned with CamScanner

அதன் பின்பு, மின் வாரியமானது, நேரடி நியமனத்திற்கான எந்தவித நடவடிக்கைகளிலும் இதுநாளது வரையில் முயற்சியினை மேற்கொள்ளவில்லை மேலும், சுமார் 1500 உதவி பொறியாளர் பதவி காலியிடங்களை கொண்டிருந்த போது, இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நிலையில், உள்முகத் தேர்வு மூலம் இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு சுமார் 963 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

தற்போது, மேலும், சுமார் 400 இளநிலை பொறியாளர் இரண்டாம் நிலைக்கு முதல் நிலை தகுதி காண் அறிக்கை வாரியம் கேட்டுள்ளது. ஏற்கனவே 11 மாதங்களாக கிடப்பில் வைக்கப்பட்டுள்ள உதவி பொறியாளர் நேரடி நியமனத்திற்கான அடுத்த கட்ட முயற்சியினை தொடராமல், மின் வாரியமானது, உள்முக தேர்வுக்கான நடவடிக்கைகளை தொடங்கியிருப்பதற்கு **பொறியாளர் கழகம் தனது வருத்தத்தை பதிவு செய்கிறது. மேலும், உடனடியாக சட்டப்பேரவையில் அறிவித்தபடி, உதவி பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட வாரியத் தலைமைக்கு உத்தரவிடுமாறு பொறியாளர் கழகம் தங்களை வேண்டி கேட்டுக்கொள்கிறது.**

உதவி பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் உடனடியாக நிரப்பிட மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் கழகம் மிக பணிவன்புடன் வேண்டி சமர்ப்பிக்கின்றது.

மிக்க நன்றி ஐயா,

இடம்: சென்னை
நாள்: 12.01.2021

தங்கள் உண்மையுள்ள

12/01/21

பொது செயலர்/பொறியாளர் கழகம்



Scanned with CamScanner